# பாரத பிரதமருக்கு மனு

## BSNLஐ பாதுகாப்போம்- இந்திய நாட்டை பாதுகாப்போம்

பெறுனர்
**திரு நரேந்திர மோடி,**
**மாண்புமிகு பாரத பிரதமர்,**
**புதுடெல்லி-110001.**

பெருமதிப்பிற்குரிய பாரத பிரதமர் அவர்களே,

தொலை தொடர்பு துறையிலிருந்து, 2000ஆம் ஆண்டு பொதுத்துறையாக மாற்றப்பட்ட BSNL நிறுவனத்தின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் சேவைகள் குறித்து இந்திய நாட்டு மக்களாகிய நாங்கள் மிகுந்த கவலை கொள்கிறோம். பெரும்பாலான நாங்கள் கார்ப்பரேஷனாக மாறும் முன் தொலை தொடர்பு துறையிடமிருந்தும், தற்போது BSNLன் சேவைகளையும் பயன்படுத்தி வருகிறோம்.

கடந்த சில வருடங்களாக BSNLன் சந்தைப் பங்கீடு 10%ஆக குறைந்து வருவதாக நாங்கள் தெரிய வருகிறோம். அதன் சேவைகளும் முன்னர் இருந்ததை போல தற்போது இல்லை. செய்யப்பட வேண்டிய விரிவாக்கமும் செய்யப்படுவதில்லை. BSNLன் சேவைகள் மேம்படுத்தவும், அதில் முன்னேற்றம் காணவும், விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய அவசரம் தற்போது தேவைப்படுகிறது.

முதல் 9 வருடங்களில் ஒட்டுமொத்தமாக 40,000 கோடி ரூபாய்களை லாபமீட்டிய BSNL நிறுவனம், 2009-10 ஆம் ஆண்டு முதல் கடந்த நான்கு ஆண்டுகளாக நஷ்டத்தை சந்தித்து அதன் ஒட்டுமொத்த நஷ்டம் 28,000 கோடி ரூபாய்களாக மாறி உள்ளதாக நாங்கள் தெரிய வருகிறோம். அரசாங்கத்தின் சொந்த நிறுவனமான BSNLக்கு சாதகமாக இருப்பதற்கு பதிலாக தனியாருக்கு சாதகமாக இருக்கின்ற அரசாங்கத்தின் தற்போதைய நவீன தாராளமயக் கொள்கைகள் தான் BSNL நிறுவனம் நலிவடையக் காரணம் என்று எங்களுக்கு சொல்லப்படுகிறது. BSNLக்கு வழங்கப்பட வேண்டிய ADC கட்டணம், DOTக்கு BSNL நிறுவனம் கொடுத்த உரிமக்கட்டணம் திரும்ப வழங்குவது, அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த சமூக கடமை என்ற அடிப்படையில் கிராமப்புறங்களில் BSNL கொடுக்கும் சேவைகளால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட USO நிதியிலிருந்து BSNLக்கு நிதி ஒதுக்குவது ஆகிய அரசின் உறுதிமொழிகள் எந்தவிதமான நியாயமும் இன்றி நிறுத்தப்பட்டதால், BSNLக்கு கடுமையான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. BSNLக்கு இந்த உதவிகள் மீண்டும் தொடர வேண்டும் என்றும் அரசு கொடுத்த உறுதிமொழிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் நாங்கள் மிக உறுதியாக கருதுகிறோம்.

சேவைகள் மிகக் கடுமையாகவும், மோசமாகவும் பாதிக்கப்படுவதற்கு அடிப்படையான காரணம், மொபைல் கருவிகள், ப்ராட்பேண்ட் மோடம், ட்ராப் வயர்கள், தொலைபேசி கருவிகள், கேபிள்கள் உள்ளிட்ட கருவிகள் பற்றாக்குறையாக உள்ளதுதான். 2006ஆம் ஆண்டு மிகவும் அவசரமாக தேவைப்பட்ட மொபைல் கருவிகள் வாங்குவதற்காக இறுதி செய்யப்பட்ட டெண்டர்கள், BSNL நிறுவனத்திடம் தேவையான நிதி இருந்த போதும், தனியார் நிறுவனங்களுக்கு சாதகமாக அரசாங்கத்தின் தலையீட்டின் காரணமாக மூன்று முறை ரத்து செய்யப்பட்டன. அந்த டெண்டர்கள் அன்று இறுதி செய்யப்பட்டு கருவிகள் வாங்கப்பட்டிருந்தால் தொலைத்தொடர்பு துறையின் NUMBER ONE நிறுவனமாக BSNL உருவாகி இருக்கும். குறைந்த பட்சம் தற்போதாவது, BSNLன் சேவைகளின் தரத்தை உயர்த்த தேவையான டவர்கள் உள்ளிட்ட கருவிகள் வாங்குவதற்கு உதவியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து BSNL நிறுவனம் கடன்பெறுவதற்கு அரசு

உதவி செய்ய வேண்டும். தனியானதொரு டவர் கம்பெனி போன்று BSNLலிலிருந்து தனித்தனி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டதென்றால் BSNL நிறுவனம் சிதறுண்டு போகும் என்பதால் அத்தகைய முயற்சிகள் கைவிடப்பட வேண்டும். 20,000 கோடி ரூபாய் என்கின்ற மிகப்பெரிய கடனில் உள்ள MTNL நிறுவனம் BSNL நிறுவனத்தோடு இணைக்கப்படும் என்கிற முன்மொழிவு BSNLன் புத்தாக்கத்தை தடுத்து விடும்.

இந்த சூழ்நிலையில், மக்களுக்கு சிறந்த சேவை தருவதற்காக BSNLஐ பலப்படுத்தவும், புத்தாக்கம் செய்யவும், கீழ்கண்ட நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்:

1) மாதக்கணக்கில் நிரப்பப்படாமல் உள்ள BSNLன் CMD உள்ளிட்ட இரண்டு இயக்குனர் பதவிகளை உடனடியாக நிரப்ப வேண்டும்.
2) துணை டவர் நிறுவனத்தின் உருவாக்கத்தை கைவிட வேண்டும். BBNL நிறுவனத்தை BSNLஉடன் இணைக்க வேண்டும்.
3) கிராமப்புற தரைவழி தொலை தொடர்பு சேவைகள் கொடுப்பதால் ஏற்படும் நஷ்டத்தினை போதுமான வகையில் ஈடுகட்ட வேண்டும்.
4) முன்னேற்றம், விரிவாக்கம் மற்றும் சிறந்த சேவைகளை தருவதற்கு தேவையான கருவிகள் உடனடியாக வாங்க வேண்டும். அதில் TRANSMISSION NETWORKஐ பலப்படுத்துவதற்கு தேவையான டவர்கள் நிர்மானிப்பதற்கும், ஆப்டிக் ஃபைபர் கேபிள்கள் பதிப்பதற்கும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.
5) தொலை தொடர்பு துறையிடமிருந்து BSNLக்கு சொத்துக்கள் மாற்றப்பட வேண்டும்.
6) BSNL-MTNL இணைக்கும் முடிவினை கைவிட வேண்டும்.
7) BSNLக்கு இலவசமாக ஸ்பெக்ட்ரம் ஒதுக்கப்பட வேண்டும்.
8) BSNLன் விரிவாக்கத்திற்கு தேவையான பொருளாதார உதவிகள் செய்யப்படவேண்டும்.
9) BSNL நிறுவனம் 4G சேவைகள் வழங்க வேண்டும்.
10) BSNL நிறுவனம் அரசுக்கு திருப்பிக் கொடுத்த BWA ஸ்பெக்ட்ரத்திற்கான 6,400 கோடி ரூபாய்களை அரசு BSNLக்கு திருப்பித் தர வேண்டும்.
11) புதியதாக பணிக்கு ஆட்களை எடுக்க வேண்டும்.
12) மத்திய, மாநில அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறைகள் BSNL சேவையை பயன்படுத்துவது என்பதை கட்டாயமாக்கப்பட வேண்டும்.

பொதுத்துறை தொலை தொடர்பு நிறுவனமான BSNL புதுப்பிக்கப்பட்டு முன்பிருந்ததை போன்ற சிறந்த சேவைகளை மக்களுக்கு தருவதற்கு தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு பாரத பிரதமர் மேற்கொள்ள வேண்டும் என மீண்டுமொரு முறை தாழ்மையுடன் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

| வ.எண் | பெயர் | ஊர் | கையெழுத்து |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |